# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW14

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிவண்ணன் | Caste | : |
| S/o.W/o.D/o. | : பிரகாசம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 28.01.2025.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் குமரன்பேட்டை, எடப்பாடியில் குடியிருக்கிறேன். நான் சம்பவ சமயத்தில் எடப்பாடி பஸ் ஸ்டாண்ட் அருகே நஞ்சுண்டேஸ்வரர் கோவில் சைக்கிள் ஸ்டேண்ட் னஎன்ற பெயரில் சைக்கிள் ஸ்டாண்ட் வைத்திருந்தேன். 2018ம் வருடம் மதியம் 3.00 மணி சுமாருக்கு நிறைய பேர் வண்டியை ஸ்டாண்டில் நிறுத்தி விட்டு சென்றார்கள். 5 நாட்கள் கழித்து சங்ககிரி காவல் ஆய்வாளர் சைக்கிள் ஸ்டாண்டிற்கு வந்து யமாகா க்ரக்ஸ் வண்டி மீது வழக்கு உள்ளது என்று வழக்கு சம்மந்தமாக

வண்டி தேவைப்படுகிறது என்று சொல்லி எடுத்து சென்றார். அந்த வண்டியின் எண் 7, 8 வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது ஞாபகமில்லை. வண்டியை விடும்போது ஸ்டாண்டில் உள்ள நோட்டில் வண்டியை விட்ட நபரின் பெயர் மற்றும் வாகனத்தின் பதிவு எண் எழுதி வைப்போம். வண்டியை விடுவதற்கான நோட்டையும் காவல் ஆய்வாளர் என்னிடமிருந்து பெற்றுக்கொண்டார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பொதுவாக சைக்கிள் ஸ்டாண்டில் வண்டியை விடும்போது வண்டிக்கான டோக்கன் கொடுப்போம் என்றால் சரி. ஸ்டாண்ட் எடப்பாடியில் உள்ளதால் நிறைய நபர்கள் வாகனங்களை விட்டுச்செல்வார்கள் என்றால் சரி. ஸ்டாண்டில் யார் எந்த வண்டியை நிறுத்தி செல்கிறார்கள் என்று குறிப்பாக என்னால் சொல்ல முடியாது என்றால் சரி. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.